# பறந்து போனாயே! ஹரி!!



முத்து முத்தாய் எழுதிவிடும் சீராளன்,
முத்தாரமாய் முறுவல் சிந்தும் நாயகன்!
கொத்தாய் அன்பைச் சொறியும் கோமகன்!
பித்தாய் உறவுகளைப் பேணிடும் தீரன்!

மத்திய வயதில் மாறாப் பயணம்,
இத்தரை மீதில் யாரிடம் கோபம்?
கைத்தலம் பற்றியக் காரிகையும் மறந்து,
மெத்தனமாய்ப் பறந்து போனாய் ஏனோ?

கொத்தாய் மக்களைத் தவிக்க விட்டு,
சொத்தாய் இறையவன் சூடிட அழைத்தானோ!
வித்தகனே வியப்பூட்டும் அன்பின் நாயகனே!
இத்தரையில் உன்நினைவு எந்நாளும் வாழுமன்றோ!

**கு.ப. அசோகன்**

**15-09-2020**